**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

**முன்னிலை : திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆனித் திங்கள் 02–ம் நாள்

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 16–ம் நாள் செவ்வாய்க்கிழமை

*******

**<u>அசல் வழக்கு எண். 234/2008</u>**

**<u>CNR.No.TNMY07–000045–2008</u>**

தமிழ்முல்லை ...**வாதி**

...**எதிர்**...

1. பிரதாப்
2. வட்ட வழங்கல் அலுவலர், சீர்காழி
3. வட்டாட்சியர், சீர்காழி
4. மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம்
5. மாநில கணக்காயர், [A&E]
   மாநிலக்கணக்காயர் அலுவலகம். ...**பிரதிவாதிகள்**
   (Plaint amended as per order in
   IA.02/2025, dated: 21.01.2026)

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 08.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ராஜேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

வாதியின் மகளான இறந்த புருஸ்கயாவின் இறப்பு பயனீடு மற்றும் இதர பயனீடுகளை 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் கொடுக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி, இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:52:47 +0530

1. <u>வாதி வழக்குரையின் சுருக்கம்</u>

(1.1) வாதி மயிலாடுதுறை தாலுக்கா, கீழஆத்துக்குடி சர்ச்தெருவில் தனது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், வாதியின் மூத்த மகள் புருஸ்கயா என்றும், குரொமிகே, பிரஷ்நியோ என்ற இரண்டு மகன்கள் உள்ளதாகவும், வாதியின் கணவர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் காலத்திலேயே மரணமடைந்துவிட்டதாகவும், வாதியின் கணவர் இறந்த பிறகு அவரது மகள் புருஸ்கயாவிற்கு கருணை அடிப்படையிலான வேலைக்கு இதர வாரிசுகளின் சம்மதத்தின் பேரில், 2ம் பிரதிவாதியான சீர்காழி வட்ட வழங்கல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி கிடைத்தது என்றும், அதன் மூலம் புருஸ்கயா வாதியையும், தன் இரண்டு சகோதரர்களையும் பராமரித்து வந்தார் என்றும்,

(1.2) மேற்படி புருஸ்கயாவின் வருமானத்தை நம்பியே வாதியும், அவரது இரண்டு மகன்களும் வாழ்ந்து வந்ததாகவும், இந்நிலையில் புருஸ்கயா 1ம் பிரதிவாதியை காதலிப்பதாக வாதியிடம் தெரிவித்ததாகவும், 1ம் பிரதிவாதி எந்த வேலையும் இன்றி இருந்து வந்ததால் வாதி மறுப்பு தெரிவித்த நிலையில், வாதியின் மகள் புருஸ்கயா வீட்டை விட்டு வெளியேறி 1ம் பிரதிவாதியை கடந்த 25.10.2006 அன்று தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூரில் உள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் சன்னதியில் திருமணம் செய்து கொண்டதாகவும், திருமணம் ஆன சில நாட்களிலேயே 1ம் பிரதிவாதியும், அவருடைய தாயாரும், வாதியின் மகளிடம் வரதட்சணை கேட்டதாகவும், வாதியின் மகளை திருமணம் செய்து கொண்டதால் வரதட்சணை பெறமுடியாமல் போய்விட்டதே என்று ஆத்திரம் அடைந்து 1ம் பிரதிவாதியின் தாயார் வாதியின் மகளை கொடுமைப் படுத்தியுள்ளார் என்றும்,

(1.3) மேலும் வாதி குடும்பத்தினர் குடியிருந்து வந்த வீட்டை விற்று வரதட்சணையாக தரும்படி அடிக்கடி துன்புறுத்தி உள்ளதாகவும், வாதியின் கணவரின் சகோதரி கல்யாணி ரூ.25000/- பொருமானமுள்ள



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:52:52 +0530

பண்டபாத்திரங்களும் 9 1/2 பவுன் தங்க நகைகளும் சீர்வரிசையாக புருஸ்கயாவிற்கு கொடுத்துள்ளதாகவும், இதன் பிறகும் 1ம் பிரதிவாதி குடும்பத்தினர் வரதட்சணை கேட்டு மென்மேலும் பல்வேறு தொந்தரவுகளை வாதியின் மகளுக்கு கொடுத்துள்ளனர் என்றும், மேற்படி புருஸ்கயா இத்தகைய கொடுமைகள் குறித்து 2,3 பிரதிவாதிகளிடம் முறையிட்டு, இதனால் பல நாட்கள் விடுப்பும் எடுத்துள்ளார் என்றும்,

**(1.4)** இந்நிலையில் கடந்த 11.04.2007 அன்று திருமணமாகி ஆறு மாதமே முடிவுற்ற நிலையில் வாதியின் குடும்பத்தினருக்கு புருஸ்கயா விஷம் அருந்தி இறந்துவிட்டதாக தெரிவித்தனர் என்றும், மேற்படி வாதியின் மகள் இறந்தது குறித்து 1ம் பிரதிவாதி, வாதியிடம் ஏதோ நடந்தது நடந்துவிட்டது இதை பெரிதுபடுத்த வேண்டாம் என்று, அவசர அவசரமாக பிரேதத்தை அப்புறப்படுத்த நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த காரணத்தால், 1ம் பிரதிவாதியின் மீது சந்தேகம் கொண்ட வாதி, சீர்காழி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, அதன் அடிப்படையில் சீர்காழி காவல் நிலையத்தினர் குற்ற எண்.310/2007 சட்டப்பிரிவு குவிமுச.174ன் படி வழக்கு பதிவு செய்து நிலுவையில் உள்ளதாகவும்,

**(1.5)** இந்த சம்பவம் குறித்து மயிலாடுதுறை கோட்டாட்சியர் நடத்திய விசாரணையில், மேற்படி வாதியின் மகள் மரணத்திற்கு 1ம் பிரதிவாதிதான் காரணம் என்றும், 1ம் பிரதிவாதி வாதியின் மகளை கொலை செய்துவிட்டு தற்கொலை செய்துகொண்டதாக நடிப்பதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேலும் இப்பிரச்சனை குறித்து மென்மேலும் தீவிரப்படுத்தினால் கொலை செய்துவிடுவதாக வாதியை 1ம் பிரதிவாதி மிரட்டி உள்ளதாகவும், இது தொடர்பாக 12.05.2007 நாளிதழில் செய்தி வெளிவந்துள்ளது என்றும், இதன் பிறகு விசாரித்த வகையில் 1ம் பிரதிவாதிதான், புருஸ்கயாவை கொலை செய்துவிட்டு அவருடைய இறப்பு மற்றும் இதர பயனீடுகளை அடைவதற்காகவும், கருணை அடிப்படையில் வேலை பெறுவதற்காகவும் இவ்வாறு செய்துள்ளதாக தெரிய



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:52:57 +0530

வருகிறது என்றும்,

**(1.6)** இந்நிலையில் மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் பிரதிவாதி மற்றொரு பெண்ணை மறுமணம் செய்துகொண்டுவிட்டார் என்றும், இதனால் 1ம் பிரதிவாதி, இறந்த வாதியின் மகள் புருஸ்கயாவின் வாரிசு என்ற தகுதியை இழந்துவிட்டதால், இறப்பு பயனீடுகள் மற்றும் கருணை அடிப்படையிலான வேலை ஆகியவற்றை பெறுவதற்கு உரிமை அற்றவர் ஆகிவிட்டார் என்றும், மேற்படி, 1ம் பிரதிவாதி, வாதியின் மகள் புருஸ்கயாவின் இறப்பு பயனீடு மற்ற இதர பயனீடுகளை அடைய துரித ஏற்பாடு செய்து வருவதாகவும்,

**(1.7)** இதுகுறித்து வாதி வழக்கறிஞர் மூலம் கடந்த 25.01.2008 அன்று 1ம் பிரதிவாதிக்கு எவ்வித இறப்பு பயனீடுகளையும் கொடுக்கக்கூடாது என்று 3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளதாகவும், ஆனால் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் செயல்படுவதாகவும், பயனீட்டு தொகையை அடைய 1ம் பிரதிவாதி தற்போது தீவிர முயற்சி எடுத்துள்ளதாகவும், மேலும், 3,4 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தும் மற்றும் உயர் அதிகாரிகள் என்பதாலும், 4ம் பிரதிவாதி தமிழக அரசு சார்பாகவும், 5ம் பிரதிவாதி இறப்பு மற்றும் இதர பயனீட்டு தொகைகளை வழங்கும் அலுவலகம் என்பதால் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும்,

**(1.8)** எனவே, புருஸ்கயாவின் இறப்பு பயனீட்டு தொகை, இறப்பு பயனீடு மற்றும் இதர பயனீட்டுகளை அவரை கொலை செய்த 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் வழங்க கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வாதியின் குடும்பம் தற்போது மிகவும் கஷ்ட சூழ்நிலையில் இருந்து வருவதாகவும்,

**(1.9)** இறந்த புருஸ்கயாவின் இறப்பு பயனீடு மற்றும் இதர பயனீடுகள் மற்றும் கருணை அடிப்படையிலான வேலையை வாதி மட்டுமே பெறத்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:03 +0530

தகுதியுடையவர் என்றும், 1ம் பிரதிவாதிக்கு எவ்வித அருகதையும் கிடையாது என்றும், மேலும் இறந்த புருஸ்கயாவின் அனைத்து பயனீடுகளையும் வாதி மட்டுமே பெற அருகதையுடையவர் என விளம்புகை பரிகாராம் கோரி வழக்கு தாக்கல் செய்ய வாதி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>**

**(2.1)** 1ம் பிரதிவாதிக்கும், வாதியின் மகள் புருஸ்கயாவிற்கும் முறைப்படி திருமணம் நடந்தது என்பது மட்டும் உண்மை என்றும், வழக்குரையில் கண்டுள்ள இதர சங்கதிகள் யாவும் உண்மையல்ல என்றும், 1ம் பிரதிவாதியும், அவரது தாயாரும், இறந்து போன புருஸ்கயாவை வரதட்சனை கேட்டு கொடுமைபடுத்தியதாக கூறுவது சுத்தப் பொய் என்றும், வாதி கணவரின் சகோதரி கல்யாணி என்பவர் புருஸ்கயாவிற்கு ரூ.25,000/- பொருமானமுள்ள பண்ட பாத்திரங்களும், 9-1/2 பவுன் தங்க நகைகளும் சீர் வரிசையாக கொடுத்துள்ளார் என்பதும் சுத்தப் பொய் என்றும், 1ம் பிரதிவாதி சாந்தமான குணத்துடன் அவரது மனைவி புருஸ்கயாவை அன்புடனும், பாசத்துடனும் நேசித்து குடும்பம் நடத்தி வந்தார் என்றும்,

**(2.2)** வாதி பணத்தாசையும், பேராசையும் பிடித்தவர் என்றும், இறந்து போன புருஸ்கயாவை மகளென்று நினைத்து அன்பு பாராட்டாமல், அவரது சம்பளத்தையே குறியாக இருந்து வந்ததாகவும், மேலும் வாதி புருஸ்கயாவின் சம்பளத்தை கொண்டு மனை வாங்கி, அதில் புருஸ்கயாவின் சம்பளத்தை கொண்டு வீட்டி கட்டி, புருஸ்கயாவை பெரும் கடனாளி ஆக்கி வைத்து இருந்தார் என்றும், இதெல்லாம் 1ம் பிரதிவாதிக்கும், புருஸ்கயாவிற்கும் திருமணம் நடப்பதற்கு முன்பாகவே ஏற்பட்ட கடன்கள் என்றும், வாங்கிய கடனை கட்டாமல் புருஸ்கயா சம்பளத்தையே குறி வைத்து வாதி காலம் கடத்தி வந்ததாகவும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:08 +0530

**(2.3)** கடன் கொடுத்தவர்கள் புருஸ்கயாவிற்கு தொல்லை கொடுத்ததால், கடன் தொல்லை தாங்காமல் தற்கொலை செய்து கொண்டு விட்டார் என்றும், எனவே புருஸ்கயாவின் மரணத்திற்கு முழு முதற் காரணமே வாதி தான் என்றும், ஆனால் வாதி பொய்யான விபரங்களை கூறி இவ்வழக்கை தொடர்ந்துள்ளார் என்றும், புருஸ்கயா தற்கொலை செய்து கொன்ட சமயத்தில் 1ம் பிரதிவாதி வெளியூரில் இருந்ததாகவும், ஆனால் வாதி 1ம் பிரதிவாதி மீது பழி சுமத்தி பொய்யான புகார்கள் கொடுத்து விட்டார் என்றும்,

**(2.4)** உரிய விசாரணை மேற்கொண்ட காவல்நிலைய அதிகாரியும், மயிலாடுதுறை கோட்டாட்சியர் அவர்களும் புருஸ்கயா கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டதாகவும், 1ம் பிரதிவாதி நிரபராதி எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்றும், 1ம் பிரதிவாதி புருஸ்கயாவை கொலைசெய்து விட்டதாகவும், வாதியை கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும் கூறுவது அப்பட்டமான பொய் என்றும், நாளிதழில் செய்தி வந்ததாக கூறுவதும் கற்பனை என்றும்,

**(2.5)** 1ம் பிரதிவாதி, புருஸ்கயாவின் இறப்பு பயனீட்டு தொகைகளை பெற முயற்சிப்பதாக கூறுவதும், கருணை அடிப்படையில் பணியில் சேர முற்படுவதாக கூறுவதும் சரியல்ல என்றும், ஆனால் 1ம் பிரதிவாதி தான் புருஸ்கயாவின் சட்டப்படியான வாரிசுதாரர் என்றும், இறந்து போன புருஸ்கயாவின் இறப்பு பயனீட்டு தொகைகளை பெற வாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், அதற்கான விளம்புகை பரிகாரமும் அவருக்கு கிடைக்கக் கூடியதல்ல என்றும்,

**(2.6)** வழக்கு முறையாக மதிப்பிடப்படவில்லை என்றும், எனவே, இவ்வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2,4,5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:14 +0530

**(3.1)** வாதி பிராதில் கூறியுள்ள அனைத்து அம்சங்களும் சரியல்ல என்றும், வாதி கூறியபடி, வாதி மயிலாடுதுறை தாலுக்கா, கீழஆத்துக்குடி சர்ச் தெருவில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்பதையும், வாதியின் மகள், மகன்கள் குறித்தும், வாதியின் கணவர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் காலத்திலேயே மரணமடைந்துவிட்டார் என்பதையும் வாதியே நிரூபிக்க வேண்டுமென்றும், வாதியின் கணவர் இறந்த பிறகு புருஸ்கயாவிற்கு கருணை அடிப்படையிலான வேலைக்கு இதர வாரிசுகள் சம்மதத்தின் பேரில் 2ம் பிரதிவாதியான சீர்காழி வட்ட வழங்கல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி கிடைத்தது என்பது உண்மை என்றும்,

**(3.2)** இதன் மூலம் வாதியின் மகள், வாதியையும், தனது 2 சகோதரர்களையும் பராமரித்து வந்தார் என்பதையும், மேற்படி புருஸ்கயா வருமானத்தை நம்பியே அவரது குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர் என்பதை வாதி நிரூபிக்க வேண்டுமென்றும், புருஸ்கயா 1ம் பிரதிவாதியை காதலித்தது, வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்தது, திருமணத்திற்கு பின் வரதட்சணை கேட்டு கொடுமை செய்தது போன்றவற்றிற்கும் இந்த பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும்,

**(3.3)** வாதி கூறிய படி அவரது மகள் திருமணம் முடிந்து 6 மாதத்திற்குள் விஷமருந்தி இறந்துவிட்டதாகவும், வாதியின் மகள் இறந்தது குறித்து 1ம் பிரதிவாதி வாதியிடம் கூறியது பற்றியும், சீர்காழி காவல் நிலையத்தில் குற்ற எண். 310/2007ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது பற்றியும் இந்த பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றும், வாதியின் மகள் புருஸ்கயாவின் இறப்பு பயனீடுகள் மற்றும் இதர பயனீடுகளை 1ம் பிரதிவாதி அடைய முயற்சி செய்கிறார் என்றும், இது குறித்து வாதி வழக்கறிஞர் மூலம் 25.01.2008 அன்று 1ம் பிரதிவாதிக்கு எவ்வித இறப்பு பயனீடுகளையும் கொடுக்க கூடாது என்று 3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2,3 பிரதிவாதிகள்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:20 +0530

செயல்படுவதாக கூறுவது சரியல்ல என்றும்,

**(3.4)** வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், 2 முதல் 5 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் அவர்களுக்கு சட்டப்படி கொடுக்க வேண்டிய 80.சி.பி.சி அறிவிப்பு அனுப்பபடாததால் அதனை டிஸ்பென்ஸ் செய்ய சொல்லப்பட்டுள்ள காரணங்கள் சரியில்லாததாலும் மேற்படி வழக்கு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றும், புருஸ்கயாவின் இறப்பு பயனீட்டு தொகை, இறப்பு பயனீடு மற்றும் இதர பயனீடுகளை 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் வழங்க கூடாது என்று நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்ட வாதிக்கு தகுதி இல்லை என்றும், வாதி தான் மேற்படி பயன்களை பெற தகுதி உடையவர் என்பதை வாதி நிரூபிக்க வேண்டுமென்றும்,

**(3.5)** இந்த பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள், சட்டப்படி விசாரணை செய்து சட்டப்படி புருஸ்கயாவின் இறப்பு பயனீட்டு தொகையை பெற யார் தகுதி உடையவர்கள் என்று நீதிமன்றம் கருதி தீர்ப்பு வழங்கி உத்தரவு வழங்கினால் அதன் படி நடக்க தயாராக உள்ளனர் என்றும்,

**(3.6)** வாதி கோரியுள்ள எந்த பரிகாரமும் அவருக்கு கிடைக்க கூடியதல்ல என்றும், எனவே மேற்படி வழக்கை இந்த பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்**

**(4.1)** 1ம் பிரதிவாதியும் இறந்த புருஸ்கயா அவர்களும் காதலித்து திருமணம் செய்துக்கொண்டு, எந்தவித வரதட்சணையும் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் நல்லமுறையில் வாழ்ந்து வந்ததாகவும், 1ம் பிரதிவாதியின் மனைவி புருஸ்கயா அரசு பணியில் இருக்கும் போதே இறந்துவிட்டார் என்பது உண்மை என்றும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:25 +0530

திருமணம் ஆன சிலநாட்களிலேயே 1ம் பிரதிவாதி, வாதியின் மகளிடம் வரதட்சனை கேட்டு கொடுமைபடுத்தியுள்ளதாகவும், வாதி குடும்பத்தினர் குடியிருந்து வந்த வீட்டினை விற்று வரதட்சனையாக தரும்படி அடிக்கடி துன்புறுத்தியுள்ளதாகவும், வாதி கூறுவது சுத்த பொய் என்றும்,

**(4.2)** மேற்படி 1ம் பிரதிவாதி தனது மனைவி இறந்த புருஸ்கயாவை எந்தவித வரதட்சனையும் இல்லாமல் திருமணம் செய்துக்கொண்டதாகவும், ஆனால் வாதி வழக்குக்காக 1ம் பிரதிவாதிக்கு 25,000/- பொருமானமுள்ள பண்டபாத்திரங்களும் 9 ½ பவுன் நகைகளும் சீர்வரிசையாக கொடுத்துள்ளனர் என்று கூறுவது சுத்த பொய், அப்படி எவ்வித சீர்வரிசை மற்றும் நகைகளும் 1ம் பிரதிவாதி வாங்கவில்லை என்றும்,

**(4.3)** கடந்த 11.04.2007ல் திருமணம் ஆகி ஆறு மாதமே முடிவுற்ற நிலையில் வாதியின் மகள் புருஸ்கயா இறந்துவிட்ட தகவல் கிடைத்து சென்று பார்த்தபொழுது விஷம் குடித்து இறந்ததாக தெரியவந்தது என்றும், 1ம் பிரதிவாதி ஏதோ நடந்துவிட்டது அதை பெரிதுபடுத்த வேண்டும் என்று கூறி அவசர அவசரமாக பிரேதத்தை அப்புறப்படுத்த நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார் என்றும் வாதி கூறுவது சுத்த பொய் என்றும், அத்தகைய எந்தவிதமான செயல்களிலும் 1ம் பிரதிவாதி ஈடுபடவில்லை என்றும்,

**(4.4)** மேற்படி 1ம் பிரதிவாதி எந்தவித குற்றசெயலிலும் ஈடுபடாத நிலையில் வேண்டுமென்றே தூண்டுதலில் பேரில் அவர் மீது வாதி பொய்யான புகாரினை காவல்நிலையத்தில் கொடுத்ததாகவும், ஆனால் தற்பொழுது மயிலாடுதுறை கோட்டாச்சியர் அவர்கள் நடத்திய விசாரணையில் 1ம் பிரதிவாதி எந்தவித குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்று தெரியவந்ததால், வாதி கொடுத்த புகார் மனுவில் மேல்நடவடிக்கை எடுக்கபடவில்லை என்றும், ஆனால் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு கலங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், புருஸ்கயாவின் இறப்பு பயனீடு மற்ற இதர பயனீடுகளை பெற



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:31 +0530

வேண்டும் என்ற எண்ணத்திலும், 1ம் பிரதிவாதி மீது பொய்யான காரணங்களை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது சரியல்ல என்றும்,

**(4.5)** மேலும் 1ம் பிரதிவாதி கருணை அடிப்படையில் இறந்த புருஸ்கயாவின் வேலையை பொறுவதற்காக ஈடுபட்டு வருகிறார் என்று வாதி கூறுவது ஏற்கதக்கதல்ல என்றும், வாதி 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளிடம் பொய்யான காரணங்களை மற்றும் பொய்யான ஆவணங்களை தயார்செய்து, 1ம் பிரதிவாதி புருஸ்கயாவின் வாரிசு மற்றும் இதர இறப்பு பயனீடுகளை பெறகூடாது என்று கெட்ட எண்ணத்தில் 2 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகளுக்கு வாதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், ஆனால் அப்படி எந்தவித குற்றசெயலிலும் 1ம் பிரதிவாதியும் ஈடுபடவில்லை என்றும்,

**(4.6)** மேற்படி 1ம் பிரதிவாதியின் மனைவி திருமணம் ஆவதற்கு முன்பே ICICI வங்கியில் கடன் வாங்கி சொத்து வாங்கியுள்ளார் என்றும், அதன் கடனை வங்கியில் செலுத்த சொல்லி புருஸ்கயாவின் பெற்றோர்கள் (வாதி) மற்றும் வங்கி தரப்பில் இருந்தும் இறந்த புருஸ்கயாவை கட்டாயப்படுத்தியதால் மனம் அழுத்தம் காரணமாக விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்பது தான் உண்மை என்றும், மேற்படி புருஸ்கயா இறக்கும் சமயத்தில் 1ம் பிரதிவாதி சிதம்பரத்தில் வேலையில் இருந்தபோது தன் மனைவி இறந்துவிட்டார் என்ற தகவல் கிடைக்கபெற்றது என்றும், ஆனால் வாதி, புருஸ்கயா இறப்பை பார்ப்பதற்கு செல்வதற்குள் தன் மகளை அவசர அவசரமாக அடக்கம் செய்ய 1ம் பிரதிவாதி முயற்சித்ததாக வாதி கூறுவது சுத்த பொய் என்றும்,

**(4.7)** மேற்படி புருஸ்கயாவின் இறப்பிற்கு செய்யவேண்டிய ஈமசடங்குகளை அனைத்தும் 1ம் பிரதிவாதி செய்து நல்லமுறையில் அடக்கம் செய்துள்ளார் என்றும், 1ம் பிரதிவாதி தான் அவரது மனைவிக்கு கணவர் என்ற முறையில் சட்டப்படியான வாரிசுதாரர் என்றும், ஆகையால் வாதி இந்த வழக்கில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:38 +0530

கூறியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்ககூடியதல்ல என்றும், எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரியும் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 04.03.2026 அன்று 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர் வழக்குரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**5. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.**

1. **வாதி கோரியவாறு அவருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?**
2. **தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?**

6. வாதி தரப்பில் வாதியான திருமதி. தமிழ்முல்லை என்பவர் **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதியான திரு. பிரதாப் என்பவர் **பி.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. (i)** வாதி தரப்பில் இவ்வழக்கினை அனுசரித்து வாதியான திருமதி. தமிழ்முல்லை வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக 04.05.2007 தேதியிட்ட வாதி மயிலாடுதுறை கோட்டாட்சியருக்கு அனுப்பிய மனுவின் நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 23.06.2007 தேதியிட்ட வாதி கணவரின் அக்காள் கல்யாணி என்பவர் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 12.05.2007 தேதியிட்ட தமிழ் முரசு நாளிதழ் **வா.சா.ஆ.3** ஆகவும், 25.01.2008 தேதியிட்ட வாதி தனது வழக்கறிஞர் மூலம் 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 06.10.2008 தேதியிட்ட வாதியின் மகளின் இறப்பு சான்றிதழ்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:48 +0530

**வா.சா.ஆ.5** ஆகவும், 29.05.2013 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பிரதாப் அவர்களின் 2வது திருமணத்திற்கான பத்திரிக்கை அசல் **வா.சா.ஆ.6** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**(ii)** பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான திரு. பிரதாப் என்பவர் பி.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>8. வாதி தரப்பு வாதம்:-</u>**

**(8.1) வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** வாதியின் மகள் புருஸ்கயா 1ம் பிரதிவாதியை காதலித்து கடந்த 25.10.2006ல் திருமணம் செய்துகொண்டதாகவும், திருமணத்திற்கு பிறகு வாதி கணவரின் சகோதரி புருஸ்கயாவிற்கு ரூ.25,000/- பொருமானமுள்ள பண்ட பாத்திரங்களும், 9 ½ பவுன் தங்க நகைகளும் 1ம் பிரதிவாதிக்கு சீர்வரிசையாக கொடுத்ததாகவும், ஆனால் 1ம் பிரதிவாதி மேலும் மேலும் வரதட்சணை வேண்டும் என வாதியின் மகளை துன்புறுத்தியதாகவும்,

**(8.2)** கடந்த 11.04.2007ல் திருமணமாகி 6 மாதங்களே முடிவுற்ற நிலையில், வாதியின் மகள் புருஸ்கயா விஷம் அருந்தி இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது என்றும், இதுகுறித்து 1ம் பிரதிவாதி வாதியிடம் இதை பெரிதுபடுத்த வேண்டாம் என கூறியதாகவும், இதனால் சந்தேகம் கொண்ட வாதி சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் குற்ற எண்.310/2007 ச/பி. கு.வி.மு.ச. பிரிவு 174ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், மேற்படி வாதியின் மகளை 1ம் பிரதிவாதிதான் கொலை செய்துவிட்டார் என்றும்,

மேலும் 1ம் பிரதிவாதி 2வது திருமணம் செய்துகொண்டுவிட்டார் என்றும், எனவே இறந்துபோன புருஸ்கயாவின் இறப்பு பயனீட்டு மற்றும் இதர



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:53:59 +0530

பயனீடுகளை பெறுவதற்கு 1ம் பிரதிவாதிக்கு தகுதியில்லை என்றும், இதுகுறித்து 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும், எனவே வாதி கோரியவாறு தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9. பிரதிவாதிகள் தரப்பு வாதம்:-

**(9.1) 1ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** இறந்த புருஸ்கயாவும் 1ம் பிரதிவாதியும் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள் என்றும், எவ்வித வரதட்சணையும், பிரதிபலனும் எதிர்பார்க்காமல் திருணம் செய்து நல்ல முறையில் வாழ்ந்து வந்ததாகவும், 1ம் பிரதிவாதி புருஸ்கயாவை எவ்வித வரதட்சணை கேட்டும் கொடுமைபடுத்தவில்லை என்றும், இறந்த புருஸ்கயா திருமணத்திற்கு முன்பே, ICICI வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றும், மேற்படி வீட்டிற்கான கடனை அவரது வருமானத்திலிருந்து அடைத்து வந்ததாகவும்,

மேற்படி கடனை கட்ட தாமதமானதால் வங்கி தரப்பிலிருந்து கொடுத்த அழுத்தத்தின் காரணமாக மன அழுத்தம் ஏற்பட்டு விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார் என்றும், புருஸ்கயா மரணம் தொடர்பாக சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன்படி விசாரித்த காவல் துறையினர் மற்றும் மயிலாடுதுறை கோட்டாட்சியர் 1ம் பிரதிவாதி மீது எவ்வித தவறும் இல்லை என்பதால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 1ம் பிரதிவாதி புருஸ்கயாவை கொலை செய்யவில்லை என்றும், புருஸ்கயாவிற்கு வாரிசு 1ம் பிரதிவாதி என்பதால் அவரது இறப்பு பயனீடுகள் இயல்பாகவே அவருக்கு கிடைக்கக்கூடியது என்றும், எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**(9.2) 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு**



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:54:05 +0530

**வழக்கறிஞர்** வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள பிரச்சனைக்கும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றும், இறந்துபோன புருஸ்கயாவிற்கு யார் சட்டப்படி வாரிசோ அவருக்கு புருஸ்கயாவின் இறப்பு பலன்களை நீதிமன்ற தீர்ப்புப்படி வழங்க 2 முதல் 5 பிரதிவாதிகள் தயாராக உள்ளனர் என்றும் வாதிடப்பட்டது.

**வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.**

**10**. இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதுரை, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு காண்கிறது.

**தீர்வு**

**11. எழுவினா –1**

**வாதி கோரியவாறு அவருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?**

**(11.1)** வாதி அவரது மகள் புருஸ்கயா கடந்த 11.04.2007ல் 1ம் பிரதிவாதியால் கொலை செய்யப்பட்டதாகவும், அதனால் 1ம் பிரதிவாதிக்கு புருஸ்கயாவின் இறப்பு பயனீடு மற்றும் இதர பயனீடுகளை 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் கொடுக்கக்கூடாது என்பது வாதியின் வழக்காகும். அதனை அனுசரித்து வாதி வா.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார். மேலும், அவர் மயிலாடுதுறை கோட்டாட்சியருக்கு காலம் சென்ற புருஸ்கயாவின் மரணத்திற்கு 1ம் பிரதிவாதிதான் காரணம் என்று புகார் மனு கொடுத்ததை நிரூபணம் செய்யும் வகையில் அந்த புகார் மனு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவரை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்போது,

**"1ம் பிரதிவாதி குற்றம் செய்திருந்தால் அவர்மீது காவல்**



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:54:12 +0530

> **நிலையம் சார்பில் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் அதுபற்றி வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. எனது மகள் புருஸ்கயாவின் இறப்பில் ஏதேனும் தவறு இருந்திருந்தால் விசாரணை அடிப்படையில் கோட்டாட்சியர் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும், அவ்வாறு இல்லாததால் கோட்டாட்சியர் சார்பில் நடைபெற்ற விசாரணையில் 1ம் பிரதிவாதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்"**

என்று சாட்சியமளித்துள்ளார்.

**(11.2)** வாதி தரப்பில் அவரது மகள் புருஸ்கயா இறப்பு சம்மந்தமாக 1ம் பிரதிவாதி மீது சீர்காழி காவல் நிலையத்தில் குற்ற எண்.310/2007 ச/பி. கு.வி.மு.ச 174ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டும், அதன் அடிப்படையில் மயிலாடுதுறை கோட்டாட்சியர் விசாரணை நடைபெற்றுள்ளது. மேற்கண்ட வாதியின் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, 1ம் பிரதிவாதி மீது எந்த தவறும் இல்லாத காரணத்தால்தான் கோட்டாட்சியர் சார்பில் வாதியின் புகார் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. உண்மையிலேயே 1ம் பிரதிவாதி மீது தவறு ஏதேனும் இருந்திருந்தால் மேற்கண்ட வழக்கானது இந்நேரம் இ.த.ச. பிரிவு 306ன் கீழாகவோ, அல்லது 304B அல்லது 302ன் கீழாகவோ மாற்றப்பட்டிருக்கும். மேலும், நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை 1ம் பிரதிவாதி மீது நடைபெற்றிருக்கும். ஆனால் இந்த வழக்கு சுமார் 18 ஆண்டுகளாக நிலுவையில் இருந்தாலும் அவ்வாறு மாற்றப்பட்டதாகவோ, 1ம் பிரதிவாதி மீது வழக்கு நடைபெற்றதாகவோ அல்லது நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவோ வாதி தரப்பில் எந்தவித சாட்சியமோ, சான்றாவணமோ தாக்கல் செய்யப்படவில்லை.

1ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவரை



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:54:17 +0530

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை. இது வாதியின் வழக்கிற்கு பெருத்த பாதகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், மனைவியின் மறைவிற்கு பிறகு, கணவர் இரண்டாவது திருமணம் செய்தால், மறைந்த மனைவியின் சொத்துக்களை கணவர் பெறுவதற்கு தடைசெய்யும் வகையில் **இந்து வாரிசுரிமை சட்டத்தில்** எந்த சட்டப்பிரிவுகளும் இல்லை.

1ம் பிரதிவாதிதான் மறைந்த புருஸ்கயாவின் இறப்பிற்கு காரணம் என்று எந்த நீதிமன்றத்தாலும் இந்நாள் வரை தீர்ப்பு வராத நிலையிலும், வாதி தரப்பில் 1ம் பிரதிவாதிதான் புருஸ்கயாவின் இறப்பிற்கு முழு காரணம் என்பதை நிரூபணம் செய்யாத நிலையிலும், வாதி தனது கட்சியினை சாட்சிய, சான்றவாணங்கள் மூலமாக நிரூபணம் செய்யாத நிலையிலும், வாதி கேட்கக்கூடிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா–1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**<u>12.எழுவினா–2</u>**

**தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?**

எழுவினா எண்.1ல் வழக்கிற்கு தேவையான அனைத்து தீர்வுகளும் காணப்பட்டுள்ள நிலையில், தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை என்று எழுவினா–2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:54:24 +0530

சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 16–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:54:31 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திருமதி. தமிழ்முல்லை (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 04.05.2007 | வாதி மயிலாடுதுறை கோட்டாட்சியருக்கு அனுப்பிய மனுவின் நகல் |
| வா.சா.ஆ.2 | 23.06.2007 | வாதி கணவரின் அக்காள் கல்யாணி என்பவர் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் |
| வா.சா.ஆ.3 | 12.05.2007 | தமிழ் முரசு நாளிதழ் |
| வா.சா.ஆ.4 | 25.01.2008 | வாதி தனது வழக்கறிஞர் மூலம் 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | 06.10.2008 | வாதியின் மகளின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.6 | 29.05.2013 | 1ம் பிரதிவாதி பிரதாப் அவர்களின் 2வது திருமணத்திற்கான பத்திரிக்கை அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

பி.சா.1 திரு. பிரதாப் (1ம் பிரதிவாதி)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை –</u>**

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.06.16 19:54:37 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சீர்காழி

**<u>நேரிய/வரைவு தீர்ப்புரை</u>**
அசல் வழக்கு எண்.234/2008
நாள்.16.06.2026.